# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) (நீக்கச்) சட்டம்

---

*[1982, மே மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, மே மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்ட லுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) (நீக்கச்) சட்டம்

[1982, மே மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 85/78
1207

1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) சட்டத்தினை நீக்குவதற்கும், அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்வினைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) (நீக்கச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

குறித்த சில சொத்தாண்மை கைமாற்றங்கள் சட்டத்தில் செல்லுபடி யானவையாதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு பெப்புரு வரி மாதம் 18 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்யப்பட்ட ஏதேனும் தோட்டத்தின் சொத்தாண்மைக் கைமாற்றமானது, 1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ், அமைச்சரின் இசைவுச் சான்றிதழொன்று இன்றியே அத்தகைய கைமாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும், எல்லா நோக்கங்களுக்காகவும் சட்டத்தில் செல்லுபடியானதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய கைமாற்றத்தை செல்லுபடியாக்குதலானது, அத்தகைய கைமாற்றத்தை அடுத்து அத்தகைய தோட்டத்தினது சொத்தாண்மையின் செல்லுபடியான கைமாற்றமொன்றைப் பெற்றுள்ள எவரேனும் திறத்தவரின் உரித்துவத்துக்கு அல்லது அவரது உரித்துக்கு முன்னமைபவரின் உரித்துவத்துக்கு மேலானவோர் உரித்துவத்தை அளித்தலாகாது.

1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினை நீக்குதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தோட்டங்கள் (கைமாறற் கட்டுப்பாடும் கொள்ளலும்) சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

பொருள் கோடல்.

4. இச்சட்டத்தில்,—

"தோட்டம்" என்பது—

(i) புறம்பானதும் தனிவேறானதுமான ஆதனமாக அமைவதும் ;

(ii) ஆளொருவருக்கு அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு உரியதும் அல்லது அவர்களால் வைத்திருக்கப்படுவதும் ; அத்துடன்

(iii) நூறு ஏக்கர்களுக்குக் குறையாத பரப்பளவு 1962 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னர் எப்பொழுதேனும் பயிர்ச்செய்கைக்கு உட்பட்டுள்ளதும் அல்லது ஏதேனும் வேளாண்மை நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதும்,

ஆன ஏதேனும் காணி அல்லது காணிகளின் தொகுதி எனப் பொருளாகும் என்பதுடன், விற்பனை செய்யப்படாத விளை பொருளையும் எல்லாக் கட்டடங்களையும் பொருத்திகளையும், எந்திரத் தொகுதிகளையும், கருவிகளையும், வாகனங்களையும் அத்துடன் அத்தகைய தோட்டத்திற்குரியவையும், அமைச்சரின் அபிப்பிராயப்படி அத்தகைய தோட்டத்தினைச் செயற்படுத்துவதற்குத் தேவையானவையும் ஆன அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஏனைய பொருட்களையும் உள்ளடக்கும்; அத்துடன்

"சொத்தாண்மைக் கைமாற்றம்" என்பது, ஒரு தோட்டம் தொடர்பில் விற்பனைமூலம், கொடுத்துமாறல் மூலம் அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பினைற் செய்யப்படும் கொடையொன்று அல்லாத கொடைமூலம், பிரிக்கப்பட்டதாக அல்லது பிரிக்கப்படாததாக அத்தகைய தோட்டத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் சொத்தாண்மைக் கைமாற்றம் என, அல்லது பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்குப் பிரிக்கப்பட்டதாக அல்லது பிரிக்கப்படாததாக அத்தகைய தோட்டத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் குத்தகை என, அல்லது பிரிக்கப்பட்டதாக அல்லது பிரிக்கப்படாததாக அத்தகைய தோட்டத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் அடைமானம் எனப் பொருளாகும்.